வருடாந்த அறிக்கை

2010

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்

யக்கல

வருடாந்த அறிக்கை

2010

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1995 மார்ச் 13ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 862∴8 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக 1978 இல.16 என்ற பல்கலைக்கழக சட்டத்தின் 24 அ(2) மற்றும் 24(ஆ) பந்தியின் கீழ் 1995 இல.01 உறிய கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விநிறுவகம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது..அதனூடாக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விநிறுவகத்தை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயர் கல்வி நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது.

அந்த பிரகடனத்துக்கமைய ஆயர்வேத மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை எனும் 5 ஆண்டுகளைக்கொண்ட பட்டப்பாடநெறியை நடாத்திச்செல்வதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆதற்கமைய 1995 மார்ச் மாதம் 01ஆம் திகதி முதல் உயர் கல்வி நிறுவனமாக நடாத்திச்செல்லும் இந்த நிறுவனத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான நிர்வாக நடவடிக்கை மற்றும் அபிவிருத்தியை உள்ளடக்கும் வருடாந்த அறிக்கை,இறுதி கணக்கரிக்கை மற்றும் 2010ஆம் ஆண்டுக்காக இந்த நிறுவனம் சம்பந்தமான அரச கணக்காய்வாளரால் சமர்ப்பித்துள்ள அறிக்கையையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

பேராசிரியர் ஜநித்தா ஏ லியனகே

பணிப்பாளர்

கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத
கல்வி நிறுவகம்
பணிப்பாளரின் அறிக்கை

நிறுவகத்தின் நோக்கு மற்றும் செயற்பணிகள் போன்ற இலக்குகளை அடைவதற்காக தயாரிக்கப்பட்ட 2010 தொடக்கம் 2015 வரையிலான இணைந்த திட்டத்தை இந்த நிறுவகத்தில் 2010.06.28 ஆம் திகதி நடைபெற்ற 174 ஆவது முகாமைத்துவ சபையின் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது..

அதற்கமையஇ பட்டப்படிப்பு மாணவர்களினதும் கல்விசார் பதவியினர்களினதும் வினைத்திறமைகள் மெச்சும் அளவுக்கு இலக்குகளை அடைவதற்கு இயலுமாகியுள்ளதென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எவ்வாறாயினும் இணைந்த திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை எட்டுவதற்கு தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகளினால் குறித்த இலக்கை அடைய முடியாது போயுள்ளது எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஆகவே உட்கட்டமைப்பு வசதிகள்இ அபிவிருத்தி உள்ளடக்கிய இணைந்த திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் இணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை இயலுமானளவு எட்ட முடியுமென நான் நம்புகின்றேன்.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே.
பணிப்பாளர்.

உள்ளடக்கம்

காரணம்	பக்க எண்
1. நிறுவகத்தின் நோக்கு	01
2. செயற்பணி	02
3. பணிப்பாளரின் செய்தி	03
4. முகாமைத்துவ சபை	04
5. முகாமைத்துவ சபைக் கூட்டங்களின் தினங்களும் அது சம்பந்தமான தரவுகளும்	05
6. வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல்	05
7. தேசிய மாணவர்கள் பற்றிய தகவல்	05
8. கல்விசார் பணியாளர் சபையின் தகவல்	06-07
9. கல்விசாரா பணியாளர் சபையின் தகவல்	07
10. ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம்	08
11. நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம்	08
12. பெற்ற விருதுகள் பற்றிய விபரம்	09
13. ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல்	09
14. மீள்வரல் செலவு விபரங்கள்	09
15. மூலதன செலவு பற்றிய விபரங்கள்	10
16. செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.:.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)	10
17. திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம்	10
(உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)	11
18. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு)	11
19. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்)	11
20. நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு 2010	12
21. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2010இல் கிடைத்தவை	12
22. வேறு விபரங்கள்	12
23. பணிப்பாளரின் அறிக்கை	13-14
24. 2010-12-31ஆம் திகதிக்கு் நிதி நிலைமையைக் காட்டும் அறிக்கை	15
2012-12-31உடன் முடிவடையும் வருடத்திற்கான வரவு செலவு அறிக்கை	16
25. கணக்காய்வாளரின் அறிக்கை	17-26
26. கணக்காய்வாளரின் அறிக்கைக்கு பதில்கள்	27-30

1. **நிறுவகத்தின் நோக்கு**

நோக்கு

ஆற்றல் நிறைந்த பட்டதாரிகளை உருவாக்குவதினூடாக ஆயுர்வேத கல்வி பற்றிய தலைசிறந்த மத்திய நிலையமாகுதல்.

2. **செயற்பணி**

செயற்பணி

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகத்தின் செயற்பணியாவது, ஆயுர்வேத வைத்தியத் துறையில் விஞ்ஞான ரீதியான அறிவை மற்றும் புரிந்துணர்வை வளர்த்தலும் மற்றும் அறிவைப் பரப்புதலுக்காக கீழ்வரும் நோக்கங்களையும் மற்றும் செயன்முறைகளையும் செயற்படுத்துவதுமாகும்.

> "இந்த நிறுவகத்தில் கல்வி கற்கும் மாணவர்களை அனைத்து விதத்திலும் விருத்தி செய்வதற்காக தகுந்த சூழலை உருவாக்குதல், ஆயுர்வேத வைத்தியக் கல்வியில் செயன்முறை மற்றும் ஆராய்ச்சிகளை முன்னேற்றுவதற்காக தகுந்த சூழலை கட்டியெழுப்புதல், இலங்கையில் சுகாதாரத் துறைக்கு ஏற்ற நவீன கற்கை மற்றும் பயிற்சிகள் ஊடாக அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக செயன்முறைப் பயிற்சிகளுக்கு அடிப்படையான சூழலைக் கட்டியெழுப்புதல், தற்போதுள்ள ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பட்டப் பாடநெறியின் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தி மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக திட்டம் வகுத்தல், இலங்கையில் மற்றும் நாட்டுக்கு அப்பால் சுகாதார துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், தேவையான தகுதிகள் மற்றும் ஆற்றல் கொண்ட மனிதவளக் குழுவொன்றை நிறுவகத்துக்குள் உருவாக்குதல்."

3. பணிப்பாளரின் செய்தி

அ. அறிமுகம்

நிறுவகத்தின் நோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்காக வகுக்கப்பட்ட 2010 – 2014 வரையிலான உடன்பாட்டுத் திட்டத்தை, இந்த நிறுவகத்தில் 2010-06-28 ஆம் திகதி நடைபெற்ற 174ஆவது முகாமைத்துவ சபை அங்கீகரித்துள்ளது.

ஆ. சாதனைகள்

பட்டப் படிப்பு மாணவர்களின் மற்றும் கல்விசார் பணியாளர் சபையின் செயலாற்றுகையை வரவேற்கக்கூடிய அளவுக்கு அடைய முடிந்தமையை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

இ. குறைபாடுகள்

உடன்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதில் தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக சில இலக்குகளை அடைய முடியவில்லை என்பதைக் கூற வேண்டும்.

ஈ. உடன்பாட்டுத் திட்டம்

உடன்பாட்டுத் திட்டத்தைத் திருத்தி அதனூடாக உடன்பாட்டுத் திட்டத்தின் இலக்குகள் சிலவற்றை எதிர்வரும் வருடத்தில் அடைய முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பாடவிதானத்தைத் திருத்தும் பணிகள் இவ்வருடம் பூராகவும் நடைபெற்றதோடு 2011ஆம் ஆண்டில் அதை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்தோடு நிறுவகத்தால், புதிய கட்டிடங்களில் ஒரு கட்டிடத்திற்கான அங்கீகாரம் கிடைத்திருப்பதையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். நிறுவகத்தின் குறைபாடாக இருந்த சில தொழிலாளர் பதவிகளுக்காக இணைத்துக்கொள்வதற்கும், அதனூடாக நிறுவகத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் அதிகமானவற்றை நிறுவகமூடாகவே செய்ய முடிந்தமையையும் குறிப்பிட முடியும். 2010 டிசம்பர் மாதத்தில் நிர்வாக விசாரித்தலையும் நடாத்த முடிந்தமையையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

4. **வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல்**

நிறுவனம்	பாடநெறி	மொத்த மாணவர் எண்ணிக்கை	மொத்த கல்விசார் பணியாளர் சபை	மொத்த கல்விசாரா பணியாளர் சபை
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்	ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பட்டம்(களனிய) டீ.யு.ஆ.ளு	330 (5ஆம் ஆண்டு மாணவர் உட்பட)	30	102
மொத்த எண்ணிக்கை		330	30	102

5. **தேசிய மாணவர்கள் பற்றிய தகவல்**

நிறுவகம்	பாடநெறி	மொழிமூலம்	சேர்த்துக் கொள்ளல் 2010	முதலாம் ஆண்டு மாணவர்	2ஆம் ஆண்டு முாணவர்	3ஆம் ஆண்டு முாணவர்	4ஆம் ஆண்டு முாணவர்	பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை
கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம் (2010ஆம் ஆண்டிலிருந்து மொழிமூலம் ஆங்கிலம்)	டீ.யு.ஆ.ளு	சிங்களம்	120	99	87	51	38	54
		ஆங்கிலம்						
மொத்தம்				99	87	51	38	54

2009.⁚.2010 கல்வி ஆண்டில் புதிய மாணவர்களுக்காக ஆங்கில மொழியில் விரிவுரைகள் நடாத்த ஆரம்பித்துள்ளதோடு வருடாந்தம் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 120 வரை அதிகரித்துள்ளது.

6. **வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய தகவல்**

நிறுவகம்	பாடநெறி	மொழிமூலம்	சேர்த்துக் கொள்ளல் 2010	முதலாம் ஆண்டு மாணவர்	2ஆம் ஆண்டு முாணவர்	3ஆம் ஆண்டு முாணவர்	4ஆம் ஆண்டு முாணவர்	பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை
கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம் (2010ஆம் ஆண்டிலிருந்து மொழிமூலம் ஆங்கிலம்)	டீ.யு.ஆ.ளு	சிங்களம்	120	99	87	51	38	54
		ஆங்கிலம்						
மொத்தம்				99	87	51	38	54

7. கல்விசார் பணியாளர் சபையின் தகவல்

நிருவாகம்	பாடம்	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்	ஆலோசகர்
சல்ய சாலக்ய	சல்ய	சிங்களம் ஆங்கிலம்			01			
	சாலக்ய	சிங்களம்			01			
சிறுவர் மற்றும் பெண் நோய்	பெண் நோய்	சிங்களம்			02		01	02
	சிறுவர் நோய்	சிங்களம்						
	பிரசூத தந்திர	சிங்களம்						
திரவ்யகுண விஞ்ஞான	திரவ்யகுண விஞ்ஞான	சிங்களம்		01	04			
	ரச சாஸ்திர	சிங்களம்			02			03 காட்சியாளர்
	பைஷஜ்ய கல்பனா	சிங்களம்			02			
ஆயுர்வேத சித்தாந்தம்	ஆங்கிலம் ஹிந்தி சமஸ்கிருதம்	ஆங்கிலம் சிங்களம்			01	01	01 பயிலுனர்	01 வெளிவாரி
	ஆயர்வேத வரலாறு							
	பதார்த்த விஞ்ஞானம்							
	சுரிர ரச்சனா ஆயர்வேத				02			
	உடற்செயல் ஆயுர்வேத							
	தோசதாது மள விஞ்ஞான						01 பயிலுனர்	
	வுர்தத்திரிய							
	சரிர ரச்சனா நவ்ய						01	01 வெளிவாரி
	உடற்செயல் நவ்ய							

சிகிச்சை	ரோக விஞ்ஞான				08	02		
	உடற்சிகிச்சை							
	தேசிய சிகிச்சை							
	அகத தந்திர							
	ஸ்வஸ்தவுத்திர							
	வியாதிவேதி							
	வோகாரிக்க மருத்துவ விஞ்ஞான மற்றும் தூலக்க வேதய							
	ஆராய்ச்சி முறைமை							
மொத்தம்				01	23	03	04	07

இந்தக் கற்கைப் பிரிவுகளின் கீழுள்ள உடற்செயல் பாட நடவடிக்கைகளுக்குரிய பாடங்களை, எதிர்காலத்தில் வேறு கற்கைப் பிரிவுகளாக மாற்றும் நோக்கில் ஒரு இணைப்பாளரின் கீழ் நடாத்திச் செல்ல ஆரம்பித்துள்ளது.

8. **கல்விசாரா பணியாளர் சபையின் தகவல்**

நிருவகம்.'.பிரிவு	**நிர்வாகப் பணியாளர் சபை**	**சிரேஷ்ட பதவிசார் உத்தியோகத்தர்**	**பதவிசார் உத்தியோகத்தர்**	**கனிஷ்ட**	**சிற்றூழியர்**
சிகிச்சை		01	03		02
சல்ய சாலக்ய			02		01
சிறுவர் மற்றும் பெண் நோய்			02		01
திரவ்ய குண விஞ்ஞான			03	01	01
சித்தாந்தழ்மருத்துவ விஞ்ஞானத் தொழினுட்பப் பிரிவு	01ழூ	01	04	03	02
நிர்வாகம்	02	02	10	06	04
பராமரிப்பு		01	01	04	07
பரீட்சை	01	04	04	01	01
கணக்கு	02	03	08		02
நூலகம்	02	-	03	03	01
கணினி		02	01	-	01
மொத்தம்	08	14	41	18	23

2010ஆம் ஆண்டில் கல்விசாரா பணியாளர் சபைக்கு 11பேர் புதிதாக நியமிக்கப்பட்டனர்.
ழூசிரேஷ்ட தொழினுட்ப அதிகாரி

9. **ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம்**

விடயம்	**குறித்த தொகை**	**நிதி ஈட்டுதல்**	**சமர்ப்பித்தல்**
அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை	சித்தாந்தம்	-	03
	சல்ய சாலக்ய 04	-	01
	பெண்நோய் 08	-	-
	சிகிச்சை 15	-	10
ஆ. புதிய கண்டுபிடிப்பு	-	-	-
இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை	-	-	-
ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை	-	-	-
உ. கட்டுரைகளின் எண்ணிக்கை	பெண்நோய் 06	-	-
	சிகிச்சை 07	-	-
ஊ. வேறு	பெண்நோய் 06	-	-
மொத்தம்	46	-	14

10. **நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம்**

விடயம்	**பங்குபற்றியவர்**	**பூர்த்திசெய்தவர்**	**சமர்ப்பித்தவர்**
அ. பட்டப்பின் படிப்பு			
சித்தாந்தம்	05		
சல்ய		04	
சிகிச்சை	03	02	
ஆ. டிப்ளோமா பின் படிப்பு			
சிகிச்சை	02	02	
இ. பட்டப்படிப்பு			
ஈ. டிப்ளோமா			
உ. சான்றிதழ் பாடநெறி			
பெண்நோய்	26	26	
சிகிச்சை		03	03
ஊ. வேறு			
திரவ்ய குண	41		
சிகிச்சை	28		
மொத்தம்	105	37	03

11. **பெற்ற விருதுகள் பற்றிய விபரம்**

	பாடம்	விருதுகளின் எண்ணிக்கை	கல்விசார் பணியாளர் சபை	மாணவர்களின் எண்ணிக்கை
அ. உள்நாட்டு விருது	சிகிச்சை	01		
ஆ. தேசிய விருது				
இ. சர்வதேச விருது				
ஈ வேறு				
மொத்தம்		01		

12. **ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல்**

கற்கைப் பிரிவு	பாடநெறி	மொழி மூலம்	சான்றிதழ்	டிப்ளோமா	டிப்போமா பின்படிப்பு	பட்டப் பின் படிப்பு	ஆ.ீடை
திரவ்யகுண விஞ்ஞான	ஆயுர்வேத பாமஸி	-	-	✓			
சல்ய சாலக்ய	கிஷார சூத்திர	சிங்களம்	✓				
சிறுவர் மற்றும் பெண்நோய்	ஆயுர்வேத அழகுசாதன	சிங்களம்	✓				
	ஸ்கேனிங் உபகரணப் பாவனை	சிங்களம்	✓				
புட்டப் பின் படிப்புப் பிறிவு	வைத்தியசாலை முகாமைத்துவ பட்டப் பின் டிப்லோமா	சிங்களம் ஆங்கிலம்			✓		
	யோகா மற்றும் அடக்கப் பயிற்சி பற்றிய சான்றிதழ் பாடநெறி	சிங்களம்	✓				
மொத்தம்			04	01	01		

ஆயுர்வேதப் பாடத் துறையை மேலும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் புதிய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் சிலவும் இவ்வருடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

13. **மீள்வரல் செலவு விபரங்கள்**

விடயம்	2009	2010
அ. ஊழியர் சம்பளம்	62,790,391.00	69,320,645.00
ஆ. பிரயாணச் செலவு	227,967.00	214,634.00
இ. வழங்கல்	4,127,666.00	4,242,138.00
ஈ. பராமரிப்பு	2,956,176.00	3,961,463.00
உ. கணக்கிட்ட சேவை.்.ஆராய்ச்சி, அபிவிருத்தி	11,403,413.00	12,757,081.00
ஊ. வேறு.்.பாடநெறி செலவு	3,365,933.00	7,300,373.00
மொத்தம்	84,871,546.00	97,796,334.00

14. **மூலதன செலவு பற்றிய விபரங்கள்**

விடயம்	2009	2010
அ. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	4,823,972.00	2,553,657.00
ஆ. வாகனம் கொள்வனவு செய்தல்	1,134,000.00	-
இ. புனருத்தாரன மற்றும் மேம்படுத்தல்	9,416,210.00	1,976,020.00
ஈ. கட்டுமானம்	-	32,742,461.00
மொத்தம்	15,374,182.00	37,272,138.00

கடந்த ஆண்டில் கட்டுமானப்பணி ஆரம்பித்த புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்காகச் செலுத்தப்பட்ட செலவு காரணமாக முதலீட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளன.

15. **செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.ஃ.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)**

பெயர் மற்றும் விபரம்	கடன்.ஃ.உதவி	உதவி வழங்கும் நிறுவனம்	மொத்தச் செலவு	வித்தியாசம்
வைத்தியர் திரு.பந்துல வீரசூரிய 2006 2008 2009	753,000.00 753,000.00 700,000.00	யேவழையெட ஊநவெசந கழச யுனஎயஉெந ளுவரனநைள	753,000.00 753,000.00 655,092.24	44,907.76
வைத்தியர் திரு.று.யு.டு.சந்திரசிறி 2006 2008 2009	687,150.00 687,150.00 687,150.00	ளேயுளு	687,150.00 687,150.00 528,351.28	158,798.72
வைத்தியர் திரு.ளு.ஆ.ளு.சமரகோன்	287,470.79	ளேயுளு	219,747.79	67,723.00
திரு.மு.ஆ.சந்திமால்	250,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	66,116.85	183,883.15
வைத்தியர் திரு.திஸ்ஸ ஹேவாவிதான	250,000.00	ருபுஊசுகு	21,596.00	228,404.00
வைத்தியர் திருமதி.ர்.ளு.சகுந்தலா	250,000.00	ருபுஊசுகு	213,849.90	36,150.10
வைத்தியர் செல்வி.ரூபா மதநாயக்க	250,000.00	ருபுஊசுகு	200,256.00	49,744.00
வைத்தியர் திரு.யு.யு.து.புஷ்பகுமார	250,000.00	ருபுஊசுகு	42,117.27	207,882.73
வைத்தியர் திருமதி.து.ர்ீ.சு.மு.ஜயசிங்க	250,000.00	ருபுஊசுகு	44,055.38	205,944.62
வைத்தியர் செல்வி.து.யு.னுீ.ஜயகொடி	250,000.00	ருபுஊசுகு	14,500.00	235,500.00
வைத்தியர்திருமதி.ர்ீ.வக்கும்புர	250,000.00	ருபுஊசுகு	41,868.25	208,131.75
திரு.ளு.யு.சு.யு.திஸாநாயக்க	55,000.00	ருபுஊசுகு	12,000.00	43,000.00

16. திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம் (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு

பெயர்	மொத்த மதிப்பீட்டுச் செலவு	செலவு 2009	செலவு 2010	2010-12-31 இக்கு மொத்த செலவு	முன்னேற்றம் மூ
வைத்தியர் திரு.பந்துல வீரசூரிய	2206000.00	640842.00	331037.50	216092.24	98
வைத்தியர் திரு.று.யு.டு.சந்திரசிறி	2061450.00	599671.00	163700.00	1902651.28	92
வைத்தியர் திரு.ளு.ஆ.ளு.சமரகோன்	287470.79	103348.84	116398.95	219747.79	76
திரு.மு.ஆ.சந்திமால்	250000.00	161627.05	73219.80	234846.85	94
வைத்தியர் திரு.திஸ்ஸ ஹேவாவிதான	250000.00	77246.50	146345.00	223591.50	89
வைத்தியர் திருமதி.ர்.ளு.சகுந்தலா	250000.00	105759.00	108090.90	213849.90	86
வைத்தியர் செல்வி.ரூபா மதநாயக்க	250000.00	122352.00	77904.00	200256.00	80
வைத்தியர் திரு.யு.யு.து.புஷ்பகுமார	250000.00	-	42117.27	42117.27	17
வைத்தியர் திருமதி.து.ா்.சு.மு.ஜயசிங்க	250000.00	-	44055.38	44055.38	18
வைத்தியர் செல்வி.து.யு.னு௺.ஜயகொடி	250000.00		14500.00	14500.00	06
வைத்தியர்திருமதி.ா்.வக்கும்புர	250000.00		41868.25	41868.25	17
திரு.ளு.யு.சு.யு.திஸாநாயக்க	55000.00		12000.00	12000.00	22

17. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு)

விடயம்	2010 ஒதுக்கீடு	2010 செலவு	எஞ்சியது.ஃமேலதிக (அளவு மீறிய)
அ. மீள்வரல் அற்ற திட்டங்கள்	89,525,000.00	97,796,334.00	
ஆ. மூலதனம் அல்லாத திட்டங்கள்	45,875,000.00	37,272,138.00	
இ. திட்டங்கள்- உள்நாட்டு உதவி			
ஈ. திட்டங்கள்- வெளிநாட்டு உதவி			
மொத்தம்	135,400,000.00	135,068,472.00	

18. நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்)

வருமானம் ஈட்டும் வழி	ஒதுக்கீடு மதிப்பீடு	வரவு 2010	குறை.ஃஅதிகம்
அ. பட்டதாரி மாணவர்	1,682,000.00	2,936,953.00	
ஆ. பட்டப் பின் படிப்பு			
இ. ஆலோசகர்			
ஈ. வேறு.ஃபாடநெறி நிதிமூலம்			
மொத்தம்	1,682,000.00	2,936,953.00	

19. **நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு 2010**

விடயம்	குறியீடு	தனிமாணவர் செலவு
அ. தனிமாணவர் செலவு மீள்வரல் செலவு மீ.செ.்.மாணவர் எண்ணிக்கை		289,561.00
ஆ. தனி மாணவர் செலவு முதலீட்டு செலவு மீ.செ.்.மாணவர் எண்ணிக்கை		114,683.00
மொத்தம்		404,244.00

20. **உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2010இல் கிடைத்தவை**

உட்கட்டமைப்பு பற்றிய விபரம்	வரவு	செலவு	முன்னேற்றம்
மூலதன சொத்துக்களை மேலும் மேம்படுத்தல்	4,900,000.00	2,670,505.82	
கட்டுமானம்	117,700,000.00	92,979,290.32	வேலை முடிவடைந்துள்ளது

21. **வேறு விபரங்கள்**

- சிறுவர் மற்றும் பெண் நோய்களுக்காக தினமும் சிகிச்சை சாரகம் நடாத்துவதன் மூலம் மாணவர்களுக்குச் செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.
- இன்றைய சமூகத்தில் அதிகமாகவுள்ள பிரச்சினைகளான குழந்தைப் பாக்கியம் இல்லாமை, கருப்பை சார்ந்த பிரச்சினைகள், கருப்பை இறங்குதல் மற்றும் சூலகங்களுடன் தொடர்புபட்ட (ீ-ஊ-முனு) போன்ற சந்தர்ப்பங்களில் உபயோகிக்கும் சிகிச்சை முறைகள் பற்றி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி பெற்றுக்கொடுத்தலும் மற்றும் நோயாளிகளை அறிவுறுத்தவும் மாணவர்களைப் பயிற்சித்தல்.
- பிறப்பில் ஏற்படும் ஊனங்கள், மனநலக் குறைபாடுகள் மற்றும் குணப்படுத்த முடியாத விசேட சிறுவர் நோய்களுக்காக ஆயுர்வேத ஔடதங்களை இடுதல், பஞ்சகர்ம சிகிச்சை, நில சிகிச்சை, உபயோகிக்கும் விதம் பற்றி மாணவ மாணவிகளைப் பயிற்சித்தல்.
- 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிர்வாக ஆய்வு நடவடிக்கைகளை முடித்தல்.
- நூலகக் கட்டிடம் மற்றும் மாணவர் மத்திய நிலையக் கட்டிடம் கட்டுமானங்களை ஆரம்பித்தல்.
- டீ.யு.ஆ.ளு. பாடநெறி திருத்த வேலைகளை முன்னெடுத்தல்.
- கல்வி நிறுவகத்தில் இருந்த கற்கைப்பிரிவுகள் இரண்டுக்கு புறம்பாக கற்கை நடவடிக்கைகளை விரிவுபடுத்த புதிய கற்கைப் பிரிவுகள் மூன்றை புதிதாக ஆரம்பித்தல்.

பணிப்பாளரின் அறிக்கை

1978 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் உள்ள விதிமுறைகளுக்கமைய களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்கிரமாரச்சி கல்வி நிர்வாகத்தின் 2010ஆம் ஆண்டுக்கான நிதி நடவடிக்கை பற்றிய அறிக்கை

2010ஆம் ஆண்டுக்காக நிர்வாகத்திற்கு திறைசேரியால் கிடைத்த நிதி உதவிகள் கீழ்வருமாறு

<u>மீளவரல் உதவி</u>

அரச மதிப்பீடு மூலமாகப் பெற்ற உதவி	89.52
நிர்வாகத்தால் ஈட்டும் மீள்வரல் வருமானம்	06.63
	96.15

<u>சேர்க்கப்பட்டது.</u>

முறை தேய்மானம்	9.58
மொத்தம்(மீண்டுவரும்)	105.73

<u>மூலதன உதவி</u>

செலவுத் தலைப்பு 101 புனருத்தாரன மற்றும் பராமரிப்புக்காக	3.00
செலவுத் தலைப்பு 102 உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள், மற்றும் சஞ்சிகைகள் பெறல்	2.87
செலவுத் தலைப்பு 103 கட்டிடங்கள் அமைத்தல்	40.00
மொத்தம்(மூலதன)	45.87

<u>வருமானம்</u>

2010ஆம் கணக்காண்டுக்குள் மீண்டுவரும் வருமானமாக அரசினால் கிடைத்த தொகை ரூபா 89,525,000.00 ஆவதோடு கல்வி நிறுவகத்தால் ஏனைய மீண்டுவரும் வருமான வழிகளால் பெற்ற தொகை ரூபா 6,625,834.00 உம் முறை தேய்மான திருத்த நடவடிக்கைகளோடு ரூபா 9,583,323.00உம் உட்பட மொத்த வருமானம் ரூபா 105,734,157.00ஆகும்

<u>செலவு</u>

2010ஆம் வருடத்துக்காக மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 107,579,657.00 ஆகும். இதற்கமைய வருடத்தின் வருமானத்தை விட மேலதிகமாகச் செய்த செலவு ரூபா 1,645,500.00 ஆகும்.

நிலையான சொத்துக்களை தேய்மானம் செய்தல்

நிறுவகத்தின் நிலையான சொத்துக்களை தேய்மானம் செய்வதற்காக 2010ஆம் ஆண்டுக்குள் 9,583,323.00ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

2010இல் 3 மில்லியன் ரூபா மீண்டுவரும் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகக் கிடைத்துள்ளது. அதில் 1,976,020.00ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

வருடத்தில் மூலதன ஒதுக்கீடு பிரதிபலன்

செலவுத் தலைப்பு 101 – பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு

2010ஆம் ஆண்டுக்காக 101 திட்டத்தின் கீழ் 3,000,000.00ரூபா நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, வருடத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு செலவுகளாக 1,976,020.00ரூபா செலவு செய்யபட்டுள்ளது.

செலவுத் தலைப்பு 102 – அலுவலக உபகரணங்கள், கல்வி உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள்

கொள்வனவு செய்தல்

2010ஆம் ஆண்டுக்காக 2,875,000.00ரூபா இந்தத் திட்டத்தின் கீழ் நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, அவற்றைக் கொள்வனவு செய்ய 2,553,656.00ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

செலவுத் தலைப்பு 103 – கட்டமானப் பணிகள்

2010ஆம் ஆண்டுக்காக இந்தத் திட்டத்தின் கீழ் 40,000,000.00ரூபா நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, குறித்த கட்டுமானப் பணிகளுக்காக 32,742,461.00 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே

பணிப்பாளர்

2010-12-31ஆம் திகதிக்கு நிதி நிலைமையைக் காட்டும் அறிக்கை

	2010		2009	
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
சொத்துக்கள்				
நடைமுறையற்ற சொத்துக்கள்				
அ. காணி	4,277,790		4,277,790	
ஆ. கட்டிடங்கள்	2,176,891		54,618,180	
இ. அலுவலக உபகரணங்கள்	8,890,518		8,498,580	
ஈ. கற்கை மற்றும் இரசாயண உபகரணங்கள்	2,328,077		3,730,360	
உ. மரத்தளபாடங்கள் மற்றும் இணைப்புக்கள்	2,882,946		3,451,492	
ஊ. நூலக நூல்கள்	2,167,215		2,850,720	
எ. வாகனங்கள்	1,630,547		1,931,425	
ஏ. இயந்திர உபகரணங்கள்	1,089	74,355,073	9,690	79,368,237
ஐ. வேறு		1,866,855		2,119,354
ஒ. முடிவடையாத வேலைகள்		9,446,956		1,242,340
ஓ. மூலதன முற்கொடுப்பனவு		24,537,845		-
<u>முதலீடு</u> நிலையான வைப்புகள்		9,721,231		2,979,375
		119,927,960		85,709,306
<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>				
அ. களஞ்சிய முற்கொடுப்பனவு	2,333,509		2,460,850	
ஆ. கடனாளிகள்	1,139,840		1,273,640	
இ. கடன் மற்றும் முற்கொடுப்பனவு	19,091,896		20,812,783	
ஈ. கலப்பு முற்கொடுப்பனவு	-		94,828	
உ. ஆராய்ச்சி முற்கொடுப்பனவு	53,500		-	
ஊ. முன்பு செலுத்தியவை	37,063		231,934	
எ. வங்கியில் கையிருப்பு	29,277,564		18,068,124	
ஏ. சிறு நிதிக் கையிருப்பு	180		180	
ஐ. வேறு வருமானங்கள்	750,597		726,572	
மொத்த சொத்து		52,684,149		43,668,911
		172,612,109		129,378,217

<u>பொறுப்புகள்</u> அ. நடைமுறைப் பொறுப்புகள்				
ஆ. பணம் செலுத்தல்	441,450		280,950	
இ. திட்டமிட்ட செலவு	6,538,398		3,737,775	
	2,944,616	9,924,464	3,940,725	7,959,450
<u>நடைமுறையற்ற பொறுப்புகள்</u>				
அ. மிகையூதியத்திற்காக ஒதுக்கீடு				
மொத்தப்பொறுப்பு		25,778,315		24,325,006
மொத்த தூய சொத்துக்கள்∴உரிமைகள்		35,702,779		32,284,456
தூய சொத்துக்கள்∴உரிமைகள்		136,909,330		97,093,761
அ. செலவு செய்த மூலதனம்				
ஆ. செலவு செய்யாத மூலதனம்				
இ. நிதியம்	127,203,071		99,514,256	
ஈ. விசேட விடயங்களுக்கான உதவி	8,627,173		24,311	
முழு தூய சொத்துக்கள்			(43,301,965)	
	(4,330,026)		1,857,159	
	5,409,112	136,909,330		97,093,761

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே
பணிப்பாளர்

று.யு.னு.ளு.மொலகொட
பிரதி நிதிப் பொறுப்பாளர்

2012-12-31உடன் முடிவடையும் வருடத்திற்கான

வரவு செலவு அறிக்கை

	2010ரூபா	ரூபா	2009ரூபா	ரூபா
செயற்பாட்டு வருமானம்				
மீண்டுவரல் உதவி		89525000		86000000
முறை தேய்மானம்		9583323		
வேறு வருமானம்				
1.கடன் மற்றும் முற்கொடுப்பனவு வட்டி	809,686		862,047	
2.பல்வேறு வரவு	1,454,157		440,027	
3.வட்டி வருமானம்	268,265		296,349	
4.மாணவர் பதிவுக் கட்டணம்	147,060		86,090	
5.பரீட்சைக் கட்டணம்	5,400		6,520	
6.நூலகத் தண்டப்பணம்	42,890		31,181	
7.வைத்தியக் கட்டணம்	18,530		24,030	
8.சொத்துக்களால் கிடைத்த கூலி	190,965		201,682	
வருமானம்	-		637	
9.பிரசுரங்கள் விற்பனை	-		-	
10.பழைய பொருள் விற்பனை(வாகனங்கள்)	-		37,711	
11.தொடர்பாடல்ச் செயற்பாடுகள்	3,688,881		-	
12.வெளிவாரிப் பாடநெறி வருமானம்		6,625,834		1,987,274
		105,734,157		87,987,274
செயற்பாட்டுச் செலவு	69,320,645		62,790,391	
ஊழியர் சம்பளம்	214,634		227,967	
பிரயாணச் செலவு	4,242,138		4,127,666	
வழங்குதல்	3,961,463		2,956,176	
பராமரிப்பு	2,438,411		11,222,734	
உடன்படிக்கைச் சேவைகள்	318,670		180,679	
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	9,583,323		0,192,869	
தேய்மானம்	3,611,492		,365,933	
வேறு செயற்பாட்டுச் செலவு	3,688,881		-	
பாடநெறிச் செலவு		107,379,657		95,064,415
மொத்த செயற்பாட்டுச் செலவு		1,645,500		7,077,141
செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட மேலதிக செலவு (குறைதல்)				

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No: சீஈ/எப் /டப்லியூஏஐ/ 2010/எப்ஏ
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2011 மே 13

பணிப்பாளர்
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 இன் 1 ஆம் இலக்க கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1),111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3),(4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவுகளின் பிரகாரம் இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து, நியாயமாக சமர்பிப்பதற்கு ஏற்றவாறு

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தி பராமரித்துச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தேர்ந்தெடுத்து பிரயோகித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன இப்பொறுப்பினுள் உள்ளடங்குகின்றன.

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்துக்கான அடிப்படையும்

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களினது மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கல்கலையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை தெரிவு அடிப்படையில் பரிசோதனை செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள், முக்கிய மதிப்பீடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கமளிப்புக்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தெய்விடப்பட்டுள்ள ஆனால் தொடர்ந்தும் பாவனையிலிருக்கும் சொத்துக்களை மீள் விலைமதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்ற 07 வாகனங்களை மீள விலை மதித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட ரூபா.148,199,683 மொத்தமான கணக்கீட்டுக் குறைபாடுகள்

2011 மார்ச் 30 ஆந் திகதிய வரைபு அறிக்கையின் மூலம் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதில் ரூபா.6,379,688 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு மீளத்திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தன. சீராக்கப்பட்டாத ரூபா. 141,819,995 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்பட்டதுடன் மேலும் அவ்வாறான குறைபாடுகள் இருப்பதற்கான சாத்தியத்தினை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) ஜயசேகர புலமைப்பிரிசில் நிதியம் மற்றும் அதற்குரிய வட்டித் தொகையாகிய ரூபா 268,250 இனை நிதியங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலுத்தப்பட வேண்டிய மீதியொன்றாக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது

(இ) மாணவர் நிலைய நிர்மாணிப்பு ஒப்பந்தத்தின் 22 கேள்விப் பத்திரங்களை தயாரிப்பதற்காக ஆலோசகர்களிற்கு செலுத்திய ரூபா 126,000 தொகை சில்லறை வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவக வளவில் காணப்பட்ட மரங்களிலிருந்து அரிந்தெடுக்கப்பட்ட அரிமர இருப்பின் பெறுமதியினை மதிப்பிட்டு கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(உ) மத்திய அரசாங்க ஆயுர்வேத திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த ஆயுர்வேத வைத்தியசாலையின் நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் நிறுவகத்தின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 08 சொத்து வகைகளின் 2009 திசெம்பர் 31 இல் இருந்தபடியான ரூபா 220,795,990 மொத்தமான மீதிகளிற்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்துப் பட்டோலையில் அத்திகதியில் காட்டப்பட்டுள்ள மீதிக்கும் இடையில் ரூபா 141,425,745 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2010 திசெம்பர் 28 ஆந் திகதிய 1692 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சிட்டையினால் நிறுவக மீளாய்வுச் சபை உறுப்பினர்களிற்கு தங்குமிடம் மற்றும் இராப்போசனத்திற்காக ரூபா 30,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை 2010 திசெம்பர் 30 ஆந் திகதி தீர்வுசெய்யப்பட்டிருந்த போதிலும் செலவினங்களிற்குரிய சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு	இணங்கி ஒழுகாமைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி) நி.பி 165	5 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 78,555 ஆன காசுக் கட்டளைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை தேறாதிருந்ததுடன் அப் பணத்தினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கவில்லை.
(ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களிற்கு முன்னர் பாதீட்டினை அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டினை தயாரித்து முடிக்கையில் நிதியாண்டின் 10 மாதங்கள் கடந்திருந்தது. ஆகையால் நிறுவகம் பாதீட்டுக் கட்டுப்பாட்டில் இருந்து விலகியிருந்தது.

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

3.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா.100,753,823 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா.93,077,141 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 89,525,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் அப்பற்றாக்குறை ரூபா. 11,228,823 இற்கு குறைவடைந்திருந்ததுடன் கடந்த ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா.86,000,000 ஆன மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா.7,077,141 வரை குறைவடைந்திருந்தது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்கைச் செயலாற்றுகை

2009/2010 ஆம் கல்வியாண்டுக்காக நிறுவகத்தில் பதிவுசெய்திருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 151 ஆக காணப்பட்டதுடன் இவர்களில் 08 பேர் ஏனைய பல்கலைக்கழகங்களிற்கு மாற்றம் செய்து அனுப்பிவைக்கப் பட்டிருந்ததுடன் 25 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்தனர். இதன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் பாடநெறிகளை பின்பற்றிவந்திருந்த புதிய மாணவர்களின் எண்ணிக்கை 118 ஆகிய பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 78% ஆகும். அதன் படி, நிறுவகத்தின் வளங்கள் குறைப்பயன்பாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) **பரீட்சை பெறுறேுகள்**

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளிற்காக தோற்றியிருந்த 17€ மாணவர்களில் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தோரின் எண்ணிக்கை 10 ஆகிய 63% ஆக காணப்பட்டதுடன் குறைசித்தியடைந்திருந்தோரின் எண்ணிக்கை 33% ஆன 56 மாணவர்களாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) **பாடத்திட்ட திருத்தம்**

2001 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்டு வருகின்ற ஆயுர்வேத மருத்துவமாணி சத்திரசிகிச்சை பட்டப் பாடநெறிக்கான பாடத்திட்டத்தினதும் பரீட்சை வினாத்தாளினதும் அமைப்பின் தரத்தினையும் கட்டமைப்பினையும் முன்னேற்றும் பொருட்டு மீட்பதற்காக 2005 ஆம் ஆண்டில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் 30 ஆந் திகதி வரை அப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

3.2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

மாதமொன்றிற்கு ரூபா 31,000 கிரயத்தில் 128 kbps இயலளவு கொண்ட சர்வதேச வலையமைப்பொன்று பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த இயலளவு நிறுவகத்திற்குப் போதுமானதாக இல்லாமையால் சர்வதேச வலைப்பின்னலுக்குள் நுழைவதற்கு மாணவர்களிற்கு மிக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளமையால் அவர்கள் அசௌகரியமடைகின்றமை அவதானிக்கப்பட்டது.

3.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 824,000 கிரயத்தில் வெளித்தரப்பினர் ஒருவரால் தயாரிக்கப்பட்டிருந்த கணனி முறைமையிலமைந்த நிலையான சொத்துப் பதிவேடொன்று மீளாய்வாண்டில் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பதிவேடு

கிடைத்ததன் பின்னர் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களை உள்ளடக்கி அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஒரேயொரு இரகசியக் குறியீட்டினால் இப் பதிவேட்டினை வாசிப்பதற்கும் தகவல்களை உட்புகுத்துவதற்கும் சாத்தியம் உள்ளமையால் இப் பதிவேட்டின் பாதுகாப்பு மற்றும் தரவுகளின் சரியான தன்மை மீதான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாக காணப்படுகின்றது. தொடர் இலக்கத்தின் படி சொத்துக்கள் கணக்கினை அணுக முடியாததுடன் சொத்துக்கள் காணப்படும் இடத்தினை மாற்றியமைக்கையில் அவை மாற்றப்பட்டுள்ள பகுதி பதியப்பட்டிராமையால் புதிய இடத்தினை இனங்கண்டு கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் சொத்துக்கள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் இருக்கக் காணப்பட்டது.

நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிக்கையில் நூலகப் புத்தகங்கள் பௌதீக ரீதியான பரிசீலனைக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் பாவனைகள் பதிவேட்டில் காணப்படும் ஒழுங்கின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நூலகப் புத்தகங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்குதல் மீதான தெரிவுப் பரிசோதனையில் பாவனைகள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள விலைகளிற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள விலைகளிற்கும் இடையில் ரூபா 3,460 தொடக்கம் ரூபா 43,000 வரையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடலியல் பிரிவில் மரணித்த உடல்களிலிருந்து உறுப்புக்களை மாற்றுதல், மரணித்த உடல்களைப் பாதுகாத்தல், உடல் உறுப்புக்களை திரட்டுதல் மற்றும் சுத்திகரித்தல் பணிகளுக்குத் தேவையான இரண்டு தொழிலாளர் பதவிகள் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக வெற்றிடமாக காணப்பட்டன.

3.2.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ). வதுபிடிவல மூலிகைத் தோட்டத்தினைச் சுற்றி கம்பிவேலி அமைப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 1,986,650 ஆன மொத்தக் கிரய மதிப்பீட்டிற்காக வேலைகள் பொறியியலாளரினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இப் பணிக்காக அவ்வப்போது விலைமனுக்கள் கோரப்பட்டு பகுதி பகுதியாக பொருட்கள் கொள்வனவு

செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுகளிற்காக கொள்வனவுகள் சபையினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. இது தொடர்பில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,129,491 இற்காக நிதிச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ). பஹல வீதியவத்த ஊழியர் உத்தியோகபூர்வ வதிவிடத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 223,608 கிரயம் கொண்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தை போட்டி விலைமனுக்கோரல் முறை பின்பற்றப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்த பொருட்களில் காணப்பட்ட ரூபா 158,118 பெறுமதியான கொங்ரீட் உற்பத்திகளை குறித்த உற்பத்தி நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யாது அந் நிறுவன உற்பத்திகள் வேறு ஒரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ). இரசாயணப் பகுப்பாய்வுப் பிரிவின் மருந்துக் களஞ்சிய இராக்கைகளை பொருத்துவதற்கான தேவை சுட்டிக்காட்டப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் விலை மனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் விலை மனுக்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறைந்தபட்ச விலையினை அடிப்படையாகக் கொண்டு வேலை அத்தியட்சகரால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் மரங்களை அரிபவராகவோ அல்லது விற்பனையாளராகவோ இல்லாதிருந்ததுடன் அவ் வழங்குனரிற்கு பலா மரங்களை போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் மாதிரிகளின் படி மரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இதுவரை மாற்று வழிமுறைகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை.

3.2.5 மாணவர் ஒருவரிற்கான கிரயம்

கற்கைகள், நிர்வாகம் மற்றும் நிதி என்ற வகையில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 107,379,657 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் கற்கைப் பணிகளில் ஈடுபட்டிருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 334 ஆக காணப்பட்டமையால் வருடத்திற்கான மாணவர் ஒருவரிற்கான சராசரிக் கிரயம் ரூபா 321,496 ஆகும்.

3.2.6 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

மீளாய்வாண்டில் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட குறைந்தபட்ச மீதி ரூபா 18,082,243 ஆனமையால் மிகை நிதிகளை முதலீடு செய்யாது நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.2.7 நூலக நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ). நிறுவகத்தின் நூலகப் புத்தகங்கள் 1993 ஆம் ஆண்டில் இறுதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பாவனைகள் பதிவேட்டில் காண்பிக்கப்படும் நூலகப் புத்தகங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ). மாணவர்களிற்கு வெளியே எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட புத்தகங்களில் ரூபா 123,674 பெறுமதியான 229 புத்தகங்களும் பதவியணியினருக்கு வழங்கப்பட்ட புத்தகங்களில் ரூபா 20,915 ஆன 35 புத்தகங்களும் மிக நீண்டகாலமாக மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களிற்கு விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) நூலக நிர்வாகம்

(உ) நிலையான சொத்துக்கள்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ர்.யு.ளு.சமரவீர

பதில் கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் திணைக்களம்

சுதந்திர சதுக்கம்

கொழும்பு – 07

ஐயா,

<u>களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகத்தின் 2010 டிசம்பர் 31 உடன் முற்றுப் பெறும் ஆண்டுக்கான நிதியறிக்கை சம்பந்தமாக 1978 இலக்கம் 16 என்ற பல்கலைக்கழக சட்டத்தின் 108(2) பந்தி மற்றும் 1971 இல 38 எனும் நிதி சட்டத்தின் 13(7)(ஏ) பந்திகளுக்கு அமைவான கணக்காய்வாளர் அறிக்கை</u>

மேற்குறிப்பிட்ட அறிக்கை சம்பந்தமாக தற்போது நிறுவகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கின்றேன்.

1.3 கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட துறை மற்றும் கருத்துக்கான அடிப்படை

2 நிதி அறிக்கை

2.1 கருத்து

2.2 நிதி அறிக்கை சம்பந்தமான கருத்து முன்வைத்தல்

2.2.1 இலங்கை கணக்கியல் நியமங்கள்

இலங்கை கணக்கியல் நியமம் 18இற்கு அமைவாக முற்றாகத் தேய்மானம் அடைந்த எனினும் மேலும் பயன்படுத்தும் வாகனங்களை மீள மதிப்பிட்டு கணக்கிலிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

2.2.2 கணக்காளர் குறைபாடு

(அ) அறிக்கையில் காட்டப்பட்டிருந்த கணக்காளர் குறைபாடுகளை எதிர்வரும் காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது கவனத்தில் கொண்டு திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) திருத்தக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இணங்குகிறேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) நிறுவக வளாகத்தில் இருந்த மரங்களை அறுத்து மரம் பெறுவதற்கான செலவை அந்த வருடத்தின் செலவாக கணக்கீடு செய்திருப்பதோடு அந்த மரங்கள் நிறுவகத்தின் அத்தியாவசிய பராமரிப்பு வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் கணக்காய்வில் குறிப்பிட்டுள்ளவாறு தவறுதலாக கணக்கீடு செய்யப்படாத தொகை பெறுமதிகள் பற்றிய குறைபாடுகளை திருத்த இணங்குகிறேன்.

(உ) இது சம்பந்தமாக தற்போது ஆயுர்வேதத் திணைக்களத்துடன் பேசி சொத்துப் பெறுமதி மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நடைபெறுவதோடு மதிப்பீட்டுக்குப் பின்னர் குறித்த சொத்துக்களின் பெறுமதியை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

2.2.3 ஒப்பிடாத வித்தியாசங்கள்

நிலையான சொத்துப் பட்டியல் மற்றும் ஆய்வுக்குள்ளான வருடத்தின் நிதி அறிக்கையிலுள்ள மிகுதிக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை திருத்த நடவடிக்கை எடுப்பேன்.

2.2.4 கணக்காய்வுக்காக சாட்சி ஆகாமை

ஜேர்னல் இல 2010.'.266 மூலம் அந்த முற்பணத்தை ஈடுசெய்துள்ளதோடு, இது சம்பந்தமாக கணக்காய்வில் காட்டப்பட்டவாறு செய்த செலவுக்காக தெளிவான விளக்கத்துடனான பற்றுச் சீட்டுக்களை இனிவரும் காலத்தில் சமர்ப்பிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2.2.5 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கு அமைவாக இருக்காமை.

(அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி நி.ஒ.வி:165

இது சம்பந்தமாக 2011-06-23 திகதியுடைய யக்கல மக்கள் வங்கி முகாமையாளரால் அனுப்பியுள்ள கடிதத்திற்கேற்ப அந்தப் பணத்தை விரைவில் இந்த நிறுவகத்திற்கு பெற்றுத் தருவதாக அறிவித்துள்ளார்.

(ஆ) இல ீநுனு.'.12 மற்றும் 2003.'.03.'.02ஆம் திகதியுடைய அரச வியாபார சுற்று நிருபம்

நிதி ஆண்டு ஆரம்பிக்க முன்னர் உரிய வரவு செலவு மதிப்பீட்டை முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது, அந்த மதிப்பீட்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கமைய தயாரித்த இறுதி வரவு செலவு அறிக்கைக்கும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டுக்கான வரவு செலவுக்கு அங்கீகாரம் பெறத் தாமதமாகியது அந்த ஆண்டுக்கான ஒதுக்கீடுகளை 3 தவணையில் பெற்றுத் தந்தமையாலாகும்.

3 நிதி மற்றும் நடவடிக்கை மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

3.1.1 நிதிப் பெறுபேறு

3.2 நடவடிக்கை மீளாய்வு

3.2.1 செயலாற்றுகை

அ கற்கை மீளாய்வு

2009.'.2010 ஆம் ஆண்டுகளுக்காக பதிவு செய்வதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அடிக்கடி அனுப்பப்பட்ட பெயர்ப் பட்டியல்களுக்கமைய பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 151 ஆன போதிலும் இவர்களுள் சிலர் பாடநெறி உயர்வு மற்றும் மாற்றங்கள் போன்ற காரணங்களால் வேறு பல்கலைக்கழகங்களுக்கு சென்றுள்ளனர். எனினும் 2010ஆம் ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 120 ஆவதோடு அதில் 118 பேர் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் குறை பயன்பாடு கிடையாது.

ஆ. பரீட்சைப் பெறுபேறு

தற்போதுள்ள பரீட்சைப் பிரமாணங்களுக்கமைய மாணவர்கள் சித்தியடைவது அல்லது அடையாமை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் திறனைப் பொறுத்ததாகும்.

இ. பாடவிதானத் திருத்தம்

பாடவிதானத் திருத்தம் சம்பந்தமாக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

3.2.2. நடவடிக்கை வினைத்திறனின்மை

கல்வி நிறுவகத்திற்காக பெற்றுக் கொள்ளும் இணைய இணைப்பை 256 ழரீடீளு வரை அதிகரிக்க நிதிக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கமைய நடவடிக்கை நடைபெறுவதை அறியத் தருகிறேன்.

3.2.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை

ஆ. கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துப் பட்டியலில் நிறுவகத்திற்குப் பொறுப்பேற்கப்படும் மூலதன சொத்துக்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தல் நடைபெறுகின்றது.

இது சம்பந்தமாகவுள்ள இரகசிய சாவி(விசை) வழங்கல் பிரிவுப் பொறுப்பான உதவி நிதிப் பொறுப்பாளர் மற்றும் அந்த விடயம் பொறுப்பான லிகிதரால் மட்டும் பயன்படுத்துவதால் அந்த ஆவணம் பாதுகாப்பாக உள்ளது. தற்போதுள்ள குறைபாடுகளை சரியாக அடையாளம் கண்டு அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

ஆ. உடல் அலகுப் பிரிவின் வேலைகளுக்காக விஞ்ஞான கூட உதவியாளர் ஒருவரை சேர்த்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத் தருகிறேன்.

3.2.4 கொந்திராத்து நிர்வாகம்

அ. வத்துபிட்டிவல ஔடத பூங்காவைச் சுற்றி சுற்று மதில் அமைப்பதற்காக வேலை பொறியியலாளரிடம் பெற்ற மதிப்பீடு மிகக் கூடிய பெறுமானமாக இருந்ததால் அந்த அளவுத் தொகையை செலவு செய்ய நிர்வாகத்தால் முடியாமையால் கம்பி வேலி அமைக்கும் பணியைச் செய்து அதற்காக வழங்கல் பிரிவு மற்றும் நிதிக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஆ. அவசரமாகச் செய்யவேண்டியிருந்த ஊழியர் உத்தியோகபூர்வ இல்லத் திருத்தங்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்று அவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இ. கொள்வனவுக் குழுவின் அனுமதியுடன் வழங்கல் கட்டளைகள் ஒப்படைத்ததோடு அக்கட்டளைக்கேற்ப உரிய தரத்திலான மரம் வழங்காததால் நிராகரிக்கப்பட்டமையால் அந்த மரங்களை வழங்குனர் மீள எடுத்துச் சென்றுள்ளார்.

3.2.5 தனி மாணவர் செலவு

மீளாய்வு செய்த வருடத்தில் தனி மாணவர் செலவை முந்திய ஆண்டுகளை விட கீழ் மட்டத்தில் பேண முடிந்துள்ளது.

3.2.6 குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

2010-12-31ஆம் திகதிக்கு இருந்த மிகுதி நிறுவகத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் வேறு பல்வேறு செலவுகளுக்கான பணத்தில் இருந்த மிகுதியாகும்.

3.2.7 நூலக நிர்வாகம்

அ. நூலகத்தின் நூல்கள் சம்பந்தமாக முறையான ஆய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதோடு அந்த ஆய்வின் பெறுபேறுகளுக்கேற்ப நூல்களின் சரியான நிலையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. நிறுவகப் பணியாளர்களால் மீள ஒப்படைக்காத நூல்களுக்காக 15,345.ஸ்ரீ ரூபா தற்போது அவர்களின் ஊதியத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளது. மாணவர்களிடமிருந்து வரவேண்டிய நூல்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த 229 நூல்களில் மேலும் பெற எஞ்சியிருப்பது179 நூல்கள் மட்டுமே. இந்த எஞ்சிய நூல்களை பெறுவது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

4. தொகுதி மற்றும் நிர்வாகம்

தொகுதி மற்றும் நிர்வாகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்தி செயற்பட இணங்குகிறேன்.

பணிப்பாளர்

பேராசிரியர் ஜனித்தா ஏ.லியனகே

பிரதிகள் 1. துணைவேந்தர்- களனிப் பல்கலைக்கழகம்

2. தலைவர்- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

3. செயலாளர்- உயர் கல்வி அமைச்சு

4. செயலாளர்- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு